18 JUN 2013

சுருக்கம்

உயர்கல்வி – கல்லூரிக்கல்வி – 2013–14ஆம் கல்வியாண்டு முதல் 8 புதிய அரசு / பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்க நிர்வாக அனுமதி அளித்தல் மற்றும் தொடர் மற்றும் தொடராச் செலவினத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண்: 98 நாள்: 17.6.2013

விஜய, ஆனி 3,
திருவள்ளுவர் ஆண்டு 2044

<u>ஆணை</u>:-

2012 ஆம் ஆண்டிற்கான மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அலுவலர்களுக்கான மாநாட்டு நிறைவுரையின் போது 19.12.2012 அன்று, 2013–14ம் கல்வியாண்டில் கீழ்க்கண்ட புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

| வ. எண். | கல்லூரிகள் | இடம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி | சிவகாசி | விருதுநகர் |
| 2. | கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்) | காரிமங்கலம் | தருமபுரி |
| 3. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி | கோவில்பட்டி | தூத்துக்குடி |
| 4. | கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) | கடலாடி | இராமநாதபுரம் |
| 5. | கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) | முதுகுளத்தூர் | இராமநாதபுரம் |
| 6. | கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) | திருவாடணை | இராமநாதபுரம் |
| 7. | கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்) | வேப்பூர் | பெரம்பலூர் |
| 8. | கலை மற்றும் அறிவியல் கல்லூரி | கறம்பக்குடி | புதுக்கோட்டை |

2. மேலே பத்தி ஒன்றில் காணும் அறிவிப்பிற்கிணங்க கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

(i) பின்வரும் 7 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை 5 பாடப்பிரிவுகளுடன் துவங்குவதற்கு அரசால் நிர்வாக அனுமதி அளிக்கப்படுகிறது.

| வ. எண். | கல்லூரிகள் | இடம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) | சிவகாசி | விருதுநகர் |

..2..

| | | | |
|---|---|---|---|
| 2 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்) | [illegible] | [illegible] |
| 3 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) | கோவில்பட்டி | தூத்துக்குடி |
| 4. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) | கடலாடி | இராமநாதபுரம் |
| 5. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) | முதுகுளத்தூர் | இராமநாதபுரம் |
| 6. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) | திருவாடானை | இராமநாதபுரம் |
| 7. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) | கறம்பக்குடி | புதுக்கோட்டை |

(ii) பெரம்பலூர் மாவட்டம் வேப்பூரில், பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு மாதிரி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியை ஐந்து பாடப்பிரிவுகளுடன் துவங்குவதற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்படுகிறது.

(iii) மேற்குறிப்பிட்ட 7 அரசு மற்றும் ஒரு பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஒவ்வொன்றிக்கும் கீழ்க்கண்டவாறு 15 ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 17 ஆசிரியரல்லாப் பணியிடங்கள் தோற்றுவிக்க அனுமதி அளிக்கப்படுகின்றன.

| வ. எண். | பணியிடங்களின் விவரம் | ஊதிய விகிதம் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | முதல்வர் | ரூ.37,400–67,000 +10,000 + சிறப்பு படி Rs.2000 | 01 |
| 2. | உதவி பேராசிரியர்கள் | ரூ.15,600–39,100 +6,000 | 10 |
| 3. | மொழி பாடங்களுக்கான உதவி பேராசிரியர்கள் | ரூ.15,600–39,100 +6,000 | 02 |
| 4. | உடற்கல்வி இயக்குநர் | ரூ.15,600–39,100 +6,000 | 01 |
| 5. | நூலகர் | ரூ.15,600–39,100 +6,000 | 01 |
| | | மொத்தம் | 15 |
| அலுவலக பணியாளர் விவரம் | | | |
| 6. | நிதியாளர் | ரூ.15,600–39,100 +5,400 | 01 |
| 7. | கண்காணிப்பாளர் | ரூ.9,300–34,800 +4,800 | 01 |
| 8. | உதவியாளர் | ரூ.5,200–20,200 +2,800 | 02 |

| | | | |
|---|---|---|---|
| 9. | இளநிலை உதவியாளர் | ரூ.5,200–20,200 +2,400 | 02 |
| 10. | உதவி நிகழ்ச்சி நிரல் அமைப்பாளர் | ரூ.9,300–34,800 +4,200 | 01 |
| 11. | தட்டச்சர் | ரூ.5,200–20,200 +2,400 | 01 |
| 12. | அடிப்படை பணியாளர்கள்<br>இரவு காவலர் – 2<br>அலுவலக உதவியாளர் – 2<br>துப்புரவாளர் – 1<br>பெருக்குபவர் – 4 | ரூ.4,800–10,000 +1,300 | 09 |
| | | மொத்தம் | 17 |
| | | பெரு மொத்தம் | 32 |

(iv) மேலே குறிப்பிட்ட 8 கல்லூரிகள் ஒவ்வொன்றிக்கும் ரூ.725 லட்சம் மதிப்பீட்டில் நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்கு நிருவாக ஒப்பளிப்பு அளிக்கப்படுகிறது. 2013–14 ஆம் ஆண்டில் இச்செலவினத்தை மேற்கொள்ள ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ.200 லட்சம் நிதி ஒப்பளிப்பு அளிக்கப்படுகிறது.

(v) மேலே ஆணையிடப்பட்டுள்ளவாறு 2013–14–ஆம் ஆண்டில் துவங்கப்படவுள்ள 7 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் (இருபாலர் மற்றும் மகளிர்) மற்றும் ஒரு பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு மாதிரி கலை மற்றும் அறிவியல் (மகளிர்) கல்லூரி ஆகியவற்றுக்கு, ஒவ்வொரு கல்லூரிக்கும் பணியாளர்கள் சம்பள செலவினம் ரூ.92.29 இலட்சம் (தொண்ணூற்றிரண்டு இலட்சத்து இருபத்தொன்பதாயிரம் மட்டும்) மற்றும் அலுவலக செலவினம் ரூ.50,000 (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் மரத்தளவாடங்கள் (ரூ.5.00 இலட்சம்) (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) புத்தகங்கள் (10 இலட்சம்), (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) இயந்திரங்கள் மற்றும் கருவிகள் (ரூ.5.00 இலட்சம்) (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மற்றும் கணினிகள் (ரூ.10 இலட்சம்) (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஆகியவைகளை கொள்முதல் செய்வதற்கான தொடரா செலவினமாக ரூ.30.00 இலட்சம் (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) என்ற அடிப்படையில் ஒரு கல்லூரிக்கு ரூ.122.79 லட்சம் வீதம் 8 கல்லூரிகளுக்கு ரூ.9,82,32,000/– (ஒன்பது கோடியே எண்பத்து இரண்டு லட்சத்து முப்பத்தி இரண்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு அளிக்கப்படுகிறது

3. பெரம்பலூர் மாவட்டம் வேப்பூரில் துவங்கப்படவுள்ள பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு மாதிரி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் பணியாளர்கள், சம்பள செலவினம் மற்றும் அலுவலக செலவுகளுக்கான தொடர் செலவிற்கு முதல் ஐந்தாண்டுகளுக்கு மட்டும் அரசின் மானிய உதவி வழங்கப்படும். ஐந்தாண்டுகளுக்குப்பின் கல்லூரியின் அனைத்து செலவுகளும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

4. மேலே பத்தி 2 (vi) ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ள கல்லூரிகளுக்கான கட்டடங்கள் செலவினம் கீழ்க்கண்ட தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்.

ஏழு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

"4202 – கல்வி, போட்டி விளையாட்டு, கலை பண்பாடு குறித்த முலதன செலவு – 01 பொதுக் கல்வி –203 – பல்கலைக்கழகக் கல்வியும், உயர்கல்வியும் பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – JB கட்டடங்கள் – தொழில்நுட்பக் கல்வி பிரிவால் நிருவகிக்கப்படுபவை 16 பெரும்பணிகள் (DPC 4202–01–203–JB–1603)"

பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு மாதிரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேப்பூர்

"2202 பொதுக் கல்வி –03– பல்கலைக்கழகக், கல்வியும் உயர் கல்வியும் –102 பல்கலைக்கழகங்களுக்கு நிதி உதவி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் VI மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் – UA உயர் கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களில் மாதிரி கல்லூரிகளை ஏற்படுத்துதல் – 09 உதவி தொகை – 02 முலதன சொத்து உருவாக்குவதற்கான உதவித் தொகை" ( த.தொ.கு 2202 03 102 UA 0923)

5. மேலே பத்தி 2 (v)-ல் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ள கல்லூரிகளுக்கான தொடர் மற்றும் தொடராச் செலவினம் கிழ்க்கண்ட தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்.

ஆறு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் – இருபாலர் (ரூ.736.74 இலட்சம்)

2202–பொதுக்கல்வி – 03பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் – 103 அரசுக்கல்லூரிகளும் கல்வி நிறுவனங்களும் – I திட்டத்தில் சேராதது – AA கலைக் கல்லூரிகள்"

| | |
|---|---|
| 01.01 அடிப்படை சம்பளம்<br>(DPC "2202-03-103 -AA-0118) | – 3,00,00,000/– |
| 01.06 வீட்டு வாடகைப்படி<br>(DPC "2202-03-103 -AA-0163) | 10,74,000/– |
| 03.01 அகவிலைப்படி<br>(DPC "2202-03-103 -AA-0314) | [illegible],00,000/– |
| 05.02 ஏனைய சில்லறை செலவினங்கள்<br>(DPC "2202-03-103 -AA-0529) | – 3,00,000/– |
| 05.05 அறைகலன்கள்<br>(DPC "2202-03-103 -AA-0556) | – 30,00,000/– |
| 19.01 இயந்திரமும் சாதனமும் வாங்குதல்<br>(DPC "2202-03-103 -AA-1911) | – 30,00,000/– |
| 68.00 புத்தகங்கள்<br>(DPC "2202-03-103 -AA-6809) | – 60,00,000/– |
| 76.01 கணினியும் துணை பாகங்களும் வாங்குதல்<br>(DPC "2202-03-103 -AA-7611) | – 60,00,000/– |
| மொத்தம் | ரு. 7,36,74,000/– |

..5..

<u>அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்) – ரூ.122.79 இலட்சம்</u>

"2203 – பொதுக் கல்வி – 03 – பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் – 103 அரசு கல்லூரிகளும் கல்வி நிறுவனங்களும் – 1 திட்டத்தில் சேராதது – AB – கலைக் கல்லூரிகள் (மகளிர்)

| | | ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 01.01 அடிப்படை சம்பளம்<br>(கு.தொ.கு "2202-03-103 -AB-0116) | – | 50.00 |
| 01.06 வீட்டு வாடகைப்படி<br>(கு.தொ.கு "2202-03-103 -AB-0161) | – | 03.29 |
| 03.01 அகவிலைப்படி<br>(கு.தொ.கு "2202-03-103 -AB-0312) | – | 39.00 |
| 05.02 ஏனைய சில்லறை செலவினங்கள்<br>(கு.தொ.கு "2202-03-103 -AB-0527) | – | 0.50 |
| 05.05 அறைகலன்கள்<br>(கு.தொ.கு "2202-03-103 -AB-0554) | – | 5.00 |
| 19.01 இயந்திரமும் சாதனமும் வாங்குதல்<br>(கு.தொ.கு "2202-03-103 -AB-1919) | – | 5.00 |
| 68.00 புத்தகங்கள் / நோட்டு புத்தகங்கள், சிலேட்டுகள்<br>(கு.தொ.கு "2202-03-103 -AB-6807) | – | 10.00 |
| 76.01 கணினியும் துணை பாகங்களும் வாங்குதல்<br>(கு.தொ.கு "2202-03-103 -AB-7619) | – | 10.00 |
| மொத்தம் | | ரூ.122.79 |

<u>பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி – [illegible]</u>
(ரூ.122.79 இலட்சம்)

2202 பொதுக்கல்வி – 03 பல்கலைக்கழகக் கல்வியும், உயர் கல்வியும் – 102 பல்கலைக்கழகங்களுக்கு நிதி உதவி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநில திட்டம் – KC. பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளுக்கான மானியம் – 09 உதவித் தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித்தொகை (கு.தொ.கு. 2202 03 102 KC 0910)

6. மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு புதுப்பணி குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர் நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு–செலவு – 1) துறையில் தனியாக் பிறப்பிக்கப்படும் எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (வரவு–செலவு – 1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2013–14 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (வரவு–செலவு – 1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு கல்லூரிக் கல்வி அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

..6..

7. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு கல்லூரிக்கான தொடர் மற்றும் தொடராச் செலவில் உடனடி தேவையை நிர்ணயித்து அத்தொகைக்கான எதிர்பாரா செலவு நிதி முன்பணத்தை பெற்று செலவினத்தை மேற்கொள்ளுமாறும் மற்றும் அதனை சார்ந்த பல்கலைக்கழகப் பதிவாளருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளவாறு செலவினை மேற்கொண்டு அதற்கான பயன்பாட்டுச் சான்றிதழ்களை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கல்லூரி கல்வி இயக்குநர் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.31796/CMPC/13 நாள் 17.6.13–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.386 (முன்னூற்று எண்பத்தாறு).

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வ வர்மா,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6
மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர், தர்மபுரி, தூத்துக்குடி,
ராமநாதபுரம், பெரம்பலூர், புதுக்கோட்டை.
பதிவாளர், பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி.
சம்மந்தப்பட்ட மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்
(கல்லூரிக்கல்வி இயக்குநர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5/35/15./மதுரை.
மாவட்ட கருவூல அலுவலர், விருதுநகர், தர்மபுரி, தூத்துக்குடி,
ராமநாதபுரம், பெரம்பலூர், புதுக்கோட்டை.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை 18/35.

முதலமைச்சர் அலுவலகம், சென்னை.
உயர்கல்வித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை.
நிதி (கல்வி .I / வ.செ.I / வ.செ.II/மைமஆபி) துறை, சென்னை-9
உயர்கல்வி (ஏ, டி, எச், கே துறை), சென்னை -9
இ.கோ. / உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

கே. வி. ராதா
பிரிவு அலுவலர். 17.6.13
17.6.13